தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள

சீர்காழி தாலுக்காவில் பெருந்தோட்டம் மற்றும்

அகரப்பெருந்தோட்டம் கிராமத்தில் அமைக்க உத்தேசித்துள்ள

நிலக்கரியை அடிப்படையாகக்கொண்ட

**1320 மெகா வாட்**

மின்உற்பத்தித்திறன் கொண்ட

**சூப்பர் க்ரிடிகல் மின் நிலையத்தின்**

வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் மேலாண்மை திட்ட

ஆய்வறிக்கையின்

# செய்முறை சுருக்கம்

சமர்பிப்போர்

**சிந்தியா பவர் ஜெனரேடிங் கம்பனி பிரைவேட் லிமிடெட்**
சென்னை

தயாரித்து அளிப்பவர்

**பி எஸ் என்வி–டெக் பிரைவேட் லிமிடெட்,**
ஐதராபாத்

## 1.0 முன்னுரை

சிந்தியா பவர் ஜெனரேடிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ஓபுல் ரெட்டி குழுமத்தின் நிறுவன இயக்குனர்களால் நிறுவப்பட்டதாகும். இந்நிறுவனம் தற்போது நிலக்கரியை எரிபொருளாய் பயன்படுத்தி 1320 மெகாவாட் (660 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு பகுதிகள்) மின் நிலையம், பெருந்தோட்டம் மற்றும் அகரப்பெருந்தோட்டம் கிராமங்கள், சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாட்டில் அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்காக மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு கள ஆய்வுப்பணிகளுக்கான வரைமுறை குறிப்புகளை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 04–02–2011 தேதியிட்ட கடித்தில் வழங்கியுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 2006 ஆண்டு செப்டம்பர் 14–ம் நாள் வெளியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் மேலாண்மை திட்டங்களுக்கான வழிகாட்டி குறிப்பேட்டின்படி உத்தேசித்துள்ள 1320 (2 x 660) மெகா வாட் அனல் மின்நிலையத்தின் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் சாராம்சம் இந்த செய்முறை சுருக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 2.0 திட்ட விவரம்

### 2.1 திட்ட அமைவிடம்

திட்ட அமைவிட்டம் பெருந்தோட்டம் மற்றும் அகரப்பெருந்தோட்டம் கிராமங்கள், சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாட்டில் அமையவுள்ளது. இவ்விடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1.5–2.2 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

அருகாமையிலுள்ள இருப்புப் பதை, மயிலாடுதுறை சீர்காழியை இணைக்கும் தெற்கு ரெயில் வே –யின் இருப்புப்பாதையாகும். இது திட்ட இடத்திலிருந்து மேற்கு திசையில் சுமார் 12 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

திட்டஇடத்திலிருந்து உப்பனார் வடிகால் வாய்க்கால் வடதிசையில் சுமார் 2.2 கி.மீ தொலைவிலும், மணிகர்ணிகை வாய்க்கால் மேற்கு திசையில் சுமார் 1.6 கி.மீ தொலைவிலும், கவேரி ஆறு தென் திசையில் சுமார் 5.2 கி.மீ தொலைவிலும், சேவனாறு தென் திசையில் சுமார் 7.5 கி.மீ தொலைவிலும் ஓடுகிறது. வங்காள விரிகுடா திட்ட இடத்திலிருந்து கிழக்கு திசையில் சுமார் 1.1 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

திட்ட இடத்திலிருந்து மேற்கு தென் மேற்கு திசையில் மயிலாடுதுறை பெருநகரம் சுமார் 21 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

திட்ட இடம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகள் அடங்கிய அமைவிடப் படம் 1.0 –ல் காட்டப்பட்டுள்ளது.

திருவெண்காடு, நாகப்பட்டிணத்தை இணைக்கும் மாநில நெடுஞ்சாலை எண் 22, திட்ட இடத்திலிருந்து தெற்கு திசையில் சுமார் 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரம் திருக்கடையூரை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை எண் 45ஏ மேற்கு திசையில் சுமார் 7.8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அருகாமையிலுள்ள தொடர் வண்டி நிலையம் சீர்காழி ஆகும். இது சுமார் 12.3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது தாலுக்கா தலைமையகமுமாகும்.

திட்ட இடத்திற்கு அருகாமையிலுள்ள கிராமங்கள் கீழ்வருமாறு:–

- பெருந்தோட்டம் – 0.7 கி.மீ. மேற்கு
- நாயக்கர்குப்பம் – 1.2 கி.மீ. கிழக்கு
- கடைக்காடு – 1.3 கி.மீ கிழக்கு
- திருவெண்காடு – 3.2 கி.மீ மேற்குதென்மேற்கு
- திருமுல்லைவாசல் – 3.5 கி.மீ வடக்கு

திட்ட இடத்திற்கு அருகாமையிலுள்ள விமான நிலையம் திருச்சிராப்பள்ளி விமான நிலையமாகும். இது சுமார் 130 கி.மீ தொலைவில் உள்ளது. அருகிலுள்ள துறைமுகம் காரைக்கால் துறைமுகமாகும். இது சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ளது.

சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உத்தேசித்துள்ள இம்மின் நிலையம் அமையவுள்ள இடத்தை சுற்று 10 கி.மீ சுற்றளவிற்குள் அமைக்கப்படவுள்ள பிற மின் நிலையங்களின் விவரம் கீழ்வருமாறு:–

1. 2 x 660 மெகா வாட் – எம்பி பவர் – 2.5 கி.மீ (தெற்கு)
2. 2 x 660 மெகா வாட் – என்எஸ்எல் பவர் – 6.3 கி.மீ (தெற்கு)
3. 2 x 500 மெகா வாட் – பட்டேல் எனர்ஜி – 7.4 கி.மீ (தெற்கு)

திட்ட இடத்தை சுற்றி 10 கி.மீ சுற்றளவிற்குள், தேசிய பூங்கா, வனவிலங்கு சரணாலயம், யானை மற்றும் புலிகள் காப்பகம் போன்றவை ஏதும் இல்லை.

படம் 1.0 அமைவிடம்


N
Tirumullaivasal
Radhanallur
Uppanar River
Tirunagari
Mattampattinam
Kilakkarai
Mulliyarampattinam
Mel Muvarkkarai
Kil Muvarkkarai
Neyppattur
Tennampattinam
ASH POND
Kuravalur
Annappanpettal
Chavadikuppam
Nemmeli
Neyppattur
Peruntottam
Narayanapuram
Embaval
BAY OF BENGAL
Kavalambadi
Mangamadam
Chinna Peruntottam
Manikarnikal
Canal
Nayakkankuppam
KTI Sattanathapuram
PLANT SITE
Kadaikkadu
Sittangartiruppu
Tiruvengadu
Ukkadai
Puduppuram
Elayamadam
Neldavasal
Manigramam
SCALE
0
1
2km
LEGEND
ROADS
STREAMS / TANKS
RIVER
SETTLEMENTS
CANALS
SEA
PLANT SITE
PROJECT:
SINDYA POWER GENERATING COMPANY PVT. LTD:
2X660 MW COAL BASED THERMAL POWER PLANT
Perunthottam & Agaraperunthottam Village, Sirkazhi Taluk,
Nagapattinam District, Tamilnadu
TITLE:
KEY MAP
Prepared by
B.S.ENVI-TECH (P) LTD.,
HYDERABAD

சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உத்தேசித்துள்ள 1320 மெகா வாட் மின்நிலையத்தின் முக்கிய அம்சங்கள் கீழ்வருமாறு.

## 2.2 மின் நிலையத்தின் – முக்கிய அம்சம்

மின் நிலையத்தின் முக்கிய குறிப்பு கீழ்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது

<table>
<tr><th>வ. எண்</th><th>விவரம்</th><th colspan="2">பயன்பாடு / அளவு</th></tr>
<tr><td>1</td><td>திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்)</td><td colspan="2">6996</td></tr>
<tr><td>2</td><td>மொத்த நிலப்பரப்பு</td><td colspan="2">594.18 ஏக்கரா</td></tr>
<tr><td>3</td><td>மின் உற்பத்தித்திறன்</td><td colspan="2">1320 (2 x 660 மெகா வாட்)</td></tr>
<tr><td>4</td><td>எரிபொருள்</td><td colspan="2">100 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி (அல்லது) கலப்பு நிலக்கரி (70 சதவீதம் உள்நாட்டு நிலக்கரி மற்றும் 30 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி)</td></tr>
<tr><td rowspan="3">5</td><td rowspan="3">எரிபொருள் தேவை</td><td>இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி</td><td>(15,792 டன்கள் நாளொன்றிற்கு) 4.90 மில்லியன் டன்கள் ஆண்டொன்றிற்கு.</td></tr>
<tr><td colspan="2">(அல்லது)</td></tr>
<tr><td>கலப்பு நிலக்கரி (70 சதவீதம் உள்நாட்டு நிலக்கரி மற்றும் 30 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி)</td><td>(19,800 டன்கள் நாளொன்றிற்கு) 6.15 மில்லியன் டன்கள் ஆண்டொன்றிற்கு</td></tr>
<tr><td>6</td><td>எரிபொருள் மூலதாரம்</td><td colspan="2">உள்நாட்டு நிலக்கரி :–மகாநதி நிலக்கரிச் சுரங்கம்<br>இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி :– இந்தோனேஷியா</td></tr>
<tr><td>7</td><td>புகைப்போக்கி</td><td colspan="2">இரண்டு வெளியேற்றக்குழல்கள் கொண்ட ஒரு புகைபோக்கி 275 மீ உயரம்</td></tr>
<tr><td>8</td><td>நீர் மூலதாரம்</td><td colspan="2">கடல்நீர் (வங்காள விரிகுடா)</td></tr>
<tr><td>9</td><td>கடல் நீர் தேவை</td><td colspan="2">2,67,792 கன.மீ நாளொன்றிற்கு</td></tr>
<tr><td>10</td><td>குளிரூட்டும் வகை</td><td colspan="2">முற்றிலும் மூடப்பட்ட சுழற்சி குளிர்விப்பு</td></tr>
<tr><td>11</td><td>சாம்பல் குட்டை</td><td colspan="2">195 ஏக்கர்</td></tr>
</table>

## 2.3 நிலப்பரப்பு

சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலங்களை பெருந்தோட்டம் மற்றும் அகரப்பெருந்தோட்டம் கிராமங்கள், சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாட்டில் அடையாளம் கண்டுயுள்ளது.

உத்தேசித்துள்ள மின்நிலையம் சுமார் 594.18 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. இதில் சுமார் 66.90 ஏக்கர் நிலப்பரப்பு அரசாங்க நிலமும் மற்றும் 527.28 ஏக்கர் நிலம் தனியார் நிலமுமாகும். இதில் வனத்துறைக்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை.

சுமார் 430 ஏக்கர் தனியார் பட்டா நிலங்களை இந்நிறுவனம் வாங்கியுள்ளது. அனல் மின் நிலையம் அமையவுள்ள அரசுக்கு சொந்தமான 66.9 ஏக்கர் நிலங்களை மாற்று நிலங்கள் கொடுத்து வாங்குவதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டு, அந்த விண்ணப்பம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள நிலங்களை வாங்கும் பணிகள் தொடந்து நடைபெறுகின்றது.

## 2.4 நீர் மூலாதாரம் மற்றும் நீர் தேவை

இம்மின் நிலையத்திற்குத் தேவைப்படும் நீர் சுமார் 2,67,792 கனமீட்டர் நாளொன்றிற்கு ஆகும். தேவைப்படும் இந்நீர் வங்கக் கடலிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

## 2.5 எரிபொருள்

இம்மின் நிலையத்திற்குத் தேவையான முக்கிய எரிபொருள் 100 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி (அல்லது) 70 சதவீதம் உள்நாட்டு நிலக்கரி மற்றும் 30 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி என்ற விகிதாசாரத்தில் சேர்க்கப்பட்ட கலப்பு நிலக்கரி.

இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவும் மற்றும் உள்நாட்டு நிலக்கரி, மகாநதி நிலக்கரிச் சுரங்கதிலிருந்து அல்லது அரசு அங்கீகாரத்தின் படி ஏற்புடைய நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரி பெறப்படும்.

மின்நிலையத்தின் 85 சதவீத திறன் காரணியை அடிப்படையாகக்கொண்டு ஆண்டொன்றிற்கு எரிபொருள் தேவை கணக்கடப்பட்டது. அவை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி | 4.90 மில்லியன் டன்கள் ஆண்டொன்றிற்கு. |
| **(அல்லது)** | |
| கலப்பு நிலக்கரி<br>(70 சதவீதம் உள்நாட்டு நிலக்கரி மற்றும் 30 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி) | 6.15 மில்லியன் டன்கள் ஆண்டொன்றிற்கு |

**நிலக்கரி கொணர்தல்**

இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் உள்நாட்டு நிலக்கரி கடல் வழியாக மின் நிலைய வளாகத்திற்கு கொண்டுவரப்படும்.

சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தனக்கென பிரத்யேகமாக ஒரு ஜெட்டி எனப்படும் நிலக்கரி இறக்குமதி தளத்தை, மின் நிலையத்திலிருந்து சுமார் 1.2 கி.மீ தொலையில் கட்டுவிக்கவுள்ளது. இதில் ஒரு பெர்த் மற்றும் இரண்டு பாரம் தூக்கிகள் எனப்படும் கிரேன்கள் அமைக்கப்பட்டு, ஆண்டொன்றிற்கு சுமார் 9 மில்லியன் டன்கள் வரை நிலக்கரி கையாளப்படும். கிரேன்கள் மற்றும் கன்வேயர்களால் நிலக்கரி இறக்குமதி தளத்திலிருந்து மின்நிலையத்திலுள்ள நிலக்கரி சேமிப்பு தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சேகரிக்கப்படும். இந்த நிலக்கரி இறக்குமதி தளம் பனாமேக் மற்றும் கேப் வகை சரக்கு கப்பல்களை கொண்டுவந்து நிறுத்தும் வசதியுடையதாக இருக்கும்.

## 2.6 மின்னேற்றல்

உற்பத்திசெய்யப்படும் மின்சாரம் 400 கேவி மின்மாற்றி வாயிலாக பவர் க்ரிட் கார்பரேஷன் ஆ.ஃப் இந்தியா லிமிடெட்–ன் 400 கேவி க்ரிட் மூலம் 400 கேவி ஜீஐஎஸ் துணைமின்நலையத்திற்கு மின்னேற்றம் செய்யப்படும்.

சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் இதர மின் நிலைய நிறுவனங்கள் பவர் க்ரிட் கார்பரேஷன் ஆ.ஃப் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடம் பொது மின்னேற்ற நிலையம் ஒன்றை மேம்படுத்த கோரிக்கை வைத்துள்ளனர். சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் அப்பகுதியிலுள்ள அனைத்து மின் நிலையங்களுக்கும் எவ்வளவு அருகில் முடியுமோ அவ்வளவு அருகில் பொது மின்னேற்ற நிலையம் அமைக்க பரிசீலிப்பதாக பவர் க்ரிட் கார்பரேஷன் ஆ.ஃப் இந்தியா லிமிடெட் நிறுவனம் உறுதியளித்துள்ளது.

## 2.7 தொழிலாளர்கள்

மின் நிலையத்திற்கு தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டுமானத்தின் போது (நிர்வாகிகள் மற்றும் கண்காணிப்பாளர்கள்) | 103 |
| கட்டுமானத்தின் போது (தேவைப்படும் அதிகபட்ச தொழிலாளர்கள்) | 1800 |
| இயக்க நிலையின் போது (முழுதிறம் படைத்த மற்றும் குறை திறன் கொண்ட தொழிலாளர்கள்) | 221 |

உணவகம், பாதுகாப்பு, தோட்டக்கலை மேம்பாடு மற்றும் நகரியம் போன்ற வகையில் சுமார் 70 பேர் கூடுதல் வேலைவாய்ப்பினை பெறுவர். இம்மின் நிலையத்தின் கட்டுமான நிலை மற்றும் இயக்க நிலையின் போதும் தகுதியுடைய உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்படும்.

அருகிலுள்ள நகர்புறத்தையொட்டி அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய நகரியம் அமைக்கப்படும்.

## 3.0 தற்போதைய சுற்றுச்சூழல்

## 3.1 ஆய்வுப்பகுதி மற்றும் காலஅளவு

சுற்றுசூழல் தாக்கம் மற்றும் கண்காணிப்பு பற்றி கள ஆய்வின் ஒருபகுதியாக உத்தேசித்துள்ள மின்நிலையத்தை சுற்றிலும் 10 கி.மீ தொலைவு வரையுள்ள பகுதி தற்போதுள்ள சுற்றுச்சூழல் பற்றிய ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு டிசம்பர் 2010 முதல் பிப்ரவரி 2011 வரை மேற்கொள்ளப்பட்டது.

## 3.2 வானிலை நிலவரம்

நாகப்பட்டினம் மாவட்டம் மிதவெப்ப ஈரப்பத தட்பவெப்ப நிலையை கொண்ட மாவட்டமாகும். சுராசரி அதிகபட்ச வெப்பநிலை சுமார் 32.5 டிகிரி செல்ஸியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை சுமார் 19.8 டிகிரி செல்ஸியஸ். ஈரப்பதம் 70 முதல் 77 சதவீதம் வரை உள்ளது. மேலும் ஈரப்பதம் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிகமாக இருக்கும். ஆண்டு சராசரி மழையளவு 1500 மி.மீ. பெரும்பாலும் இப்பகுதி அக்டோபர் முதல் டிஸம்பர் வரையிலாள காலத்தில் அதிக

மழையை வடகிழக்கு பருவ கால மழையின் காரணமாக பெறுகிறது. கள ஆய்வுக்காலத்தில், ஆய்வுப்பகுதில் காற்றின் திசை வடக்குவடகிழக்கு, வடகிழக்கு, கிழக்குவடகிழக்கு, கிழக்கு, கிழக்குதென்கிழக்கு ஆகிய திசைகளிலிருந்து மொத்தம் 64.11 சதவீதம் கணக்கிடப்பட்டது. இக்கால அளவில் காற்றின் வேகம் 1 முதல் 15 கிலோமீட்டா ஒரு மணிக்கு என்ற அளவில் இருந்துது.

### 3.3 காற்றுச் சூழல்

காற்றின் தரத்தை அறிய ஒரு கால அளவில் வாரம் இரு முறை தொடர்ந்து 12 இடங்களில் மின்நிலையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரம், திட்ட இடத்தின் தாக்க மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்காற்று, கீழ்காற்று மற்றும் குறுக்கு காற்று திசைகள் ஆயப்பட்டன. ஆய்வின் போது காற்றில் மாசுக்களின் அளவுகள் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஊரக மற்றும் குடியிருப்பு பகுதிக்காக வரையறுத்திருக்கும் தேசிய சுற்றுபுற காற்று தர அளவுகளுக்குட்பட்டே இருப்பது கண்டறியப்பட்டது.

| வரிசை எண் | காற்றில் மாசுதூசுக்களின் வகை | காற்றில் மாசுதூசுக்களின் அனவு | வரையறுக்கப்பட்ட தேசிய சுற்றுப்புற காற்று தர அளவு |
|---|---|---|---|
| | | (μg/Nm³) | |
| 1 | **$PM_{10}$** | 25.54-47.08 | 100 |
| 2 | **$SO_2$** | 4.2-7.9 | 80 |
| 3 | **NOx** | 5.8-9.6 | 80 |

### 3.4 ஒலிச்சூழல்

உத்தேசித்துள்ள மின் நிலையம் மற்றும் அதனைச் சுற்றிலும் 12 இடங்களில் ஓசையின் அளவு 24 மணிநேரமும் பதிவு செய்யப்பட்டது. ஓசையின் அளவு பகல் நேரத்தில் 46.7 முதல் 89 டெசிபெல் வரையிலும் இரவு நேரத்தில் 40.4 முதல் 41.8 டெசிபெல் வரையில் இருந்தது.

### 3.5 நீர் சுழல்

இப்பகுதியிலுள்ள நீரின் தன்மையை ஆய்வதற்கு அமையவுள்ள மின்நிலைய வளாகத்திலுள்ள நீர் மற்றும் சுற்றுவட்டாரத்திலுள்ள 10 கி.மீ சுற்றளவுப்பகுதிகளில் 12 நில நீர் மற்றும் 4 நிலத்தடி நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. நீர் மாதிரிகளின் ஆய்வின் முடிவுகள் குடிநீருக்கான இந்திய தரக்கட்டுப்பாடு குறியீட்டு எண் ஐஎஸ் 10500 உடன் ஒப்புநோக்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள நீரின் தரத்தில் டிடீஎஸ், குளோரைடு மற்றும் நீரின் கடினத்தன்மை ஆகியவை கடல் ஒட்டிய பகுதியாக இருப்பதானால் சற்று அதிகமாக காணப்படுகின்றன.

### 3.6 நிலச்சூழல்

மின்நிலையம் மற்றும் அதனைச் சுற்றிலும் உள்ள *10* சுற்றளவுப்பகுதியல் *9* இடங்களில் மண் மாதிரிகள் எடுத்து பரிசோதிக்கப்பட்டன. ஆய்வின் முடிவில் மின்நிலைய வளாகம் அமையவுள்ள இடத்தில் மண்ணின் தன்மை மிகக்குறைந்த மகசூல் தரும் தரமுடையதாகவே கண்டறியப்பட்டது. இப்பகுதியில் பொதுவாகவே மணலுடன் கலந்த களி மண் காணப்படுகிறது.

### 3.7 உயிர்ச்சூழல் மற்றும் கடற்சூழல்

இயற்கூறு அடிப்படையில் காணும்போது திட்ட இடத்தினை சுற்றிலும் உள்ள ஆய்வுப் பகுதி வேளாண் மற்றும் நில நீர் சுற்றுச்சூழல் கொண்ட பகுதியாக அமைந்துள்ளது. ஆய்வு இடத்தில் வனப் பகுதி ஏதும் இல்லை. மின்நிலையம் அமையவுள்ள திட்ட இடத்தில் பசுமைத் தாவரங்கள் ஏதும் அதிகமாக காணப்படவில்லை. ஆய்வின்போது இங்கு அழிவை நோக்கியுள்ள அபூர்வ மரம், செடி மற்றும் கொடி இனங்கள் ஏதும் காணப்படவில்லை.

இப்பகுதியில் கடலியற் சுற்றுச்சூழல் ஆற்றல் மிக்கதும் நிலையற்றதுமாக காணப்படுகிறது. இதற்கான காணரம் என்னவென்றால் அவ்வப்போது வீசும் கடற்காற்று, உயரிய கடல் அலை மற்றும் கடற்கரையோர நீரோட்டத்தின் தன்மை ஆகியவையே ஆகும். வேதியியல் மற்றும் உயிரியியல் விவரங்களுக்கான பல்வேறு ஆய்வின் முடிவுகள் மிகுந்த ஆக்ஸிஜனேற்றம், செழுமை மற்றும் முதற் தர மற்றும் இரண்டாம் தர உயிரியல் உற்பத்தித் திறன் கொண்டதாகவும் உள்ளது. பல்வேறு கடல் வாழ் தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் இக்கடற்பகுதியில் காணப்படுகின்றன.

### 3.8 நிலப் பயன்பாடு

ஆய்வுப்பகுதியின் நிலப்பயன்பாடு பல்வேறுதரப்பட்டதாக அளவில் உள்ளது. வசிப்பிடம் *11.35* விழுக்காடு, ஒரு போக விளைநிலம் *16.96* விழுக்காடு, இரு போக விளைநிலம் *19.48* விழுக்காடு, நீர்நிலைகள் *1.86* விழுக்காடு, கடல் *38.53* விழுக்காடு மற்றும் உப்பளங்கள் பயன்பாடற்றது உட்பட *6.59* விழுக்காடு ஆகும்.

### 3.9 மக்கள் தொகை மற்றும் சமூக பொருளாதாரச்சூழல்

ஆய்வுப்பகுதிக்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ள கிராமங்களின் மொத்த மக்கள் தொகை, *2001* ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவேட்டின்படி *148852* பேர். இப்பகுதியில் மக்கள் அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு *474* பேர். இங்கு சராசரி ஆண் பெண் விகிதாச்சாரம் *1000* ஆண்களுக்கு *1004* பெண்கள் ஆகும். கல்வியறிவு *69.3* விழுக்காடு, இது மாநில அளவில் பாக்கும்போது அதிகமாகவும், மாவட்ட அளவில் குறைவாகவும் உள்ளது. ஆய்வுப்பகுதியில்

மொத்த மக்கள் தொகையில் வேலைவாய்ப்புள்ளோர் 39.6 விழுக்காடு ஆகும். இங்கு முக்கிய வேலையாட்கள் 30.5 விழுக்காடு மற்றும் சிறுதொழிலாளர்கள் 9.1 விழுக்காடு. இந்த கிராமங்களில் வேலைவாய்ப்பு கட்டமைப்புகளை பாாக்கும்போது 4.10 விழுக்காடு மட்டுமே வேளாண் சாகுபடியாளர்களாக உள்ளனர், 24.2 விழுக்காடு வேளாண்மை தொழிலாளர்கள், 10.6 விழுக்காடு இதர வேலையாட்களாகவும், 0.64 குடிசைத் தொழில் செய்பவர்களாகவும் உள்ளனர்.

## 4.0 எதிர்ப்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் மேலாண்மை திட்டம்

### 4.1 காற்றுச்சூழல்

உத்தேசித்துள்ள மின்நிலையத்திலிருந்து வெளிவரக்கூடிய காற்று மாசு தூசுக்கள் $SO_2$, NOx, & $PM_{10}$ ஆகியனவாகும். இவை எரிபொருளான நிலக்கரியை கொதிகலனில் எரிப்பதால் உண்டாகும். மாசுத்துகள்களான $SO_2$, NOx, & $PM_{10}$ ஆகியனவற்றின் தரைதள அடர்த்தி, வானிலை நிலவர அளவுகள் மற்றும் வெளிவரக்கூடிய மாசு தூசுக்களின் அளவுகளை கணக்கில் எடுத்துக்கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் கலப்பு நிலக்கரியை எரிபொருளாக உபயோகப்படுத்தி மின் உற்பத்தி செய்யும்போது ஏற்படும் கூடுதல் தரை அளவு அடர்த்தி கீழ்வருமாறு

| வரிசை எண் | விவரம் | $PM_{10}$ | $SO_2$ | NOx |
|---|---|---|---|---|
| | | ($\mu g/Nm^3$) | | |
| 1 | 100 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியை பயன்படுத்தி 1320 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் போது | 0.73 | 23.57 | 9.57 |
| 2 | கலப்பு நிலக்கரி அதாவது 70 சதவீதம் உள்நாட்டு நிலக்கரி மற்றும் 30 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியை பயன்படுத்தி 1320 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் போது | 0.93 | 23.65 | 12.09 |

தற்போதைய சுற்றுசூழல் காற்று மாசு தூசுக்களின் அளவு மற்றும் கூடுதல் அடர்த்தி ஆகியவை பின் வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | விவரம் | $PM_{10}$ | $SO_2$ | NOx |
|---|---|---|---|---|
| | | ($\mu g/Nm^3$) | | |
| 1 | தற்போதைய காற்றிலுள்ள மாசுக்களின் அளவு (அதிகபட்சம்) | 47.08 | 7.9 | 9.6 |
| 2 | கணக்கிடப்பட்ட கூடுதல் தரைதள அடர்வு (அதிகபட்சம்) | 0.93 | 23.65 | 12.09 |
| 3. | ஒட்டுமொத்த அதிகபட்ச அளவு | 48.01 (100) | 31.55 (80) | 21.69 (80) |

குறிப்பு: மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஊரக மற்றும் குடியிருப்பு பகுதிக்காக வரையறுத்திருக்கும் சுற்றுபுற காற்றுத் தரம் பற்றிய அளவுகள் அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த கூடுதல் தரை தள அடர்வு, உத்தேசித்துள்ள 1320 மெகா வாட் மின் நிலையம் மற்றும் இதனை சுற்றி 10 கி.மீ சுற்றளவில் அமையவுள்ள கீழ்கண்ட மூன்று மற்ற மின்நிலையங்களின் உமிழ்வுகளையும் கணக்கிட்டு பார்க்கும்போது, இதன் அளவுகள் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஊரக மற்றும் குடியிருப்பு பகுதிக்காக வரையறுத்திருக்கும் தேசிய சுற்றுபுற காற்று தர அளவுகளுக்குட்பட்டே இருப்பது புலனாகிறது.

1. 2 x 660 மெகா வாட் – எம்பி பவர் – 2.5 கி.மீ (தெற்கு)
2. 2 x 660 மெகா வாட் – என்எஸ்எல் பவர் – 6.3 கி.மீ (தெற்கு)
3. 2 x 500 மெகா வாட் – பட்டேல் எனர்ஜி – 7.4 கி.மீ (தெற்கு)

**காற்று மாசுக்கட்டுப்பாடு மேலாண்மை**

உத்தேசித்துள்ள மின்நிலையத்தில், இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி அல்லது கலப்பு நிலக்கரி, மின்நிலைய துவக்கத்திற்கு இரண்டாம்நிலை எரிபொருட்களான டீசல் மற்றும் எரி எண்ணெய் உதவியோடு பயன்படுத்தப்படும்.

பறக்கும் சாம்பல் சுற்றுவட்டாரத்தில் பரவாமல் தடுப்பதற்காக உயர் திறனுடைய மின்னியக்க வீழ்படிப்பான் எனப்படும் இஎஸ்பி நிர்மானிக்கப்பட்டு சாம்பல் துகள்களின் உமிழ்வு கட்டுப்படுத்தப்படும். இரண்டு கொதிகலன்களுக்கும் இரண்டு இஎஸ்பி–கள் பொருத்தப்படும். மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டி குறிப்பின்படி 275 மீட்டர் உயரமுள்ள இரட்டை வெளியேற்றக் குழல் கொண்ட ஒரு புகைபோக்கி அமைக்கப்படும்.

இஎஸ்பி காற்றின் மாசு தூசுக்களின் உமிழ்வை 50 $mg/Nm^3$ என்ற அளவில் கட்டுப்படுத்தும் திறனுடன் இருக்குமாறு வடிவமைத்து நிறுவவிருப்பதால், நிலக்கரியை எரிப்பதனால் வெளிவரும் மாசு தூசுக்களின் உமிழ்வின் தாக்கம் கட்டுப்படுத்தப்படும். எனவே, சுற்றுப்புற காற்றின் மீதான தாக்கம் மிகக்குறைவானதாகவே இருக்கும். பறக்கும் சாம்பல் இஎஸ்பி–ன் கூம்பில் சேகரிக்கப்பட்டு உலர் நிலையில் அப்புறப்படுத்தப்படும்.

அடித்தட்டு சாம்பல் கழிவாய் சேகரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு அனுப்பப்படும். மீதமுள்ள சாம்பல் கூழ்மமாய் ஆக்கப்பட்டு சாம்பல் குட்டையில் சேகரிக்கப்படும்.

நிலக்கரியை துகள்களாக்கும் இயந்திரத்தின் துகள் வெளியேற்றும் முறை மற்றும் பிற இயந்திரங்களுக்கும் வடிகட்டிப்பைகள் பொருத்தப்படும். துகள் வெளியேறும்பாதையில் 50 mg/Nm³ என்ற அளவில் கட்டுப்படுத்தும் திறனுடன் இருக்குமாறு வடிகட்டிப்பைகள் வடிவமைத்து நிறுவப்படும்,

நிலக்கரியை எரிப்பதால் NOx –ன் உமிழ்வு 650 mg/Nm³ என்ற அளவில் உத்தேசித்துள்ள மின்நிலையத்தின் புகைபோக்கியின் வாயிலாக வெளியேறும். இது சுற்றுபுற காற்றில் NOx அளனினை அதிகரிக்கும். கணக்கிடப்பட்ட NOx உமிழ்வின் கூடுதல் அளவு மற்றும் தற்போதைய காற்றின் தரத்தினோடு சேர்த்து கணக்கிட்டு பார்க்கும்போது, இதன் அளவு வரையறுக்கப்பட்ட தேசிய சுற்றுபுற காற்று தர அளவுகளுக்குட்பட்டே இருக்கும்.

நவீன வடிவமைப்புடைய குறைந்த NOx –பர்னர் மற்றும் வெப்பக்கலன் வெப்பநிலை கட்டுப்பாட்டு சாதனம் ஆகியவை நீராவி கொதிகலனுடன் பொருத்தப்படுவதன் மூலம், கொதிகலனிலிருந்து NOx –ன் உமிழ்வு குறைக்கப்படும்.

**விடுபடும் துகள்கன் கட்டுப்பாடு**

விடுபடும் துகள்களை கட்டுப்படுத்த நீர்தெளிப்பான்கள் அமைக்கப்பட்டு நிலக்கரி சேமிப்பு தளத்தை சுற்றிலும் நீர் தெளித்து துகள்கள் கட்டுப்படுத்தப்படும். மூடிய கன்வேயர் பெல்ட் மூலம் நிலக்கரியை கொண்டு வரவிருப்பதால் வெளியேறும் மாசு தூசுக்கள் கட்டுப்படுத்தப்படும்.

## 4.2 ஓலிச்சூழல்

மின் நிலையத்தின் ஓசையை ஏற்படுத்தும் மூலாதாரங்கள் அனைத்தும் 90 டெசிபெல் என்ற ஒலி அளவிற்குள் இருக்குமாறு வடிவமைக்கப்படும். ஓசை ஏற்படுத்தும் அனைத்து இயந்திரங்களும் முற்றிலும் வெளிகவசம் பொருத்தப்பட்டு ஓசையின் அளவு கட்டுப்படுத்தப்படும்.

ஓசையை ஏற்படுத்தும் இயந்திரங்களின் அருகில் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு காதுகளை மூடியிருக்கும் பாதுகாப்பு சாதனம் அளிக்கப்படும்.

124 ஏக்கர் நிலம் பசுமைபரப்பிற்காக ஒதுக்கப்பட்டு மின் நிலைய வளாகத்தினை சுற்றிலும் 50 முதல் 150 மீ அகலம் வரை பசுமைபரப்பு மேம்படுத்தப்படவிருப்பதால் ஓசை மற்றும் துகள்களை கட்டுப்படுத்தும் தடுப்பு காரணியாக பசுமைபரப்பு அமையும்.

## 4.3 நீர்ச் சூழல்

உத்தேசித்துள்ள மின்நிலையத்திற்கு தேவைப்படும் மொத்த நீரின் அளவு நாளொன்றிற்கு 2,67,792 கனமீட்டர்கள் ஆகும். மின்நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு நாளொன்றிற்கு 2,01,000 கனமீட்டர்கள் ஆகும். மின்நிலையத்தின் பல்வேறு விதமான செயல்பாட்டு நீரின் விவரங்கள் மற்றும் அதன் சுத்திகரிப்பு, வெளியேற்றம் ஆகியன கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| **வரிசை எண்** | **விவரம்** | **கழிவு நீர் (மீ$^3$/நாள்)** | **சுத்திகரிப்பு முறை** | **மறுஉபயோகம் அல்லது வெளியேற்றல்** |
|---|---|---|---|---|
| 1 | குளிரூட்டி கோபுர வெளிறேயற்ற நீர் | 178464 | ஏதுமில்லை | சாம்பல் கையாள் வதற்காக 40800 கனமீ நாளொன்றிற்கு |
| | | | | குளிரூட்டி வெளியேற்ற நீர் மீண்டும் கடலில் விடப்படுவது 137664 கனமீ நாளொன்றிற்கு |
| 2 | கடல்நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தின் வெளியேற்ற நீர் | 21456 | கடலில் விடப்படுவது | கடலில் விடப்படுவது 21456 கனமீ நாளொன்றிற்கு |
| 3 | DM அமைப்பின் மறுஉற்பத்தி நீர் | 144 | நடுநிலைத்தொட்டி அதனை தொடர்ந்து நீர்த்தல் முறை | துகள் பரவாமல் தடுப்பதற்காக 144 கனமீ நாளொன்றிற்கு |
| 4 | நீர் பகுபடுத்தி | 840 | ஏதுமில்லை | சாம்பல் கையாள் வதற்காக 840 கனமீ நாளொன்றிற்கு |
| 5 | மின் நிலையம் மற்றும் குடியிருப்பு உபயோகத்தினால் வெளியேறும் நீர். | 96 | சுத்திகரிப்பு நிலையம் | பசுமைபரப்பிற்காக 96 கனமீ நளொன்றிற்கு |
| | **மொத்தம்** | 201000 | | |

## 4.4 சாம்பல் (திடக் கழிவு) மேலாண்மை

உத்தேசித்துள்ள 1320 மெகா வாட் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சாம்பல் சேகரிப்பிற்காக 195 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. பறக்கும் சாம்பல் உலர்ந்த நிலையில் சேகரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு அனுப்பப்படும். பறக்கும் சாம்பலின் 100 சதவீத பயன்பாடு 4 ஆண்டிற்குள் எட்டப்படும்.

கணக்கிடப்பட்ட ஃப்ளை ஆஷ் எனப்படும் பறக்கும் சாம்பல் நாளொன்றிற்கு 5386 டன்கள் உற்பத்தியாகும். மின்நிலையத்திலிருந்து டால்மியா சிமென்ட் மற்றும் இந்தியா கிமென்ட் நிறுவனங்கள் நேரடியாக தங்களது சிமென்ட் கம்பனிகளுக்கு எடுத்துக்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயன்பாட்டிற்கு போக மீதமுள்ள சாம்பல், நீர் ஊடுருவி செல்லாத வகையில் 0.5 மிமீ தடிமனுள்ள எல்டிபி லைனிங் எனப்படும் பாய் வைத்து அமைக்கப்பட்ட சாம்பல் குட்டையில் சேகரிக்கப்படும்.

## 4.5 கடலியல் மீதான தாக்கம்

கடலியல் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வினை இந்தோமார் கோஸ்டல் ஹைட்ராலிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மேற்கொண்டது. இதில் கடலில் விடப்படும் குளிரூட்டி வெளியேற்ற கடல் நீர் மற்றும் கடல் நீரை நன்னீராக்கும் வெளியேற்றம் மற்றும் நிலக்கரி இறக்குமதி தளம் ஆகியவற்றின் தாக்க மதிப்பீடும் உள்ளடங்கும்.

குளிரூட்டி வெளியேற்ற கடல் நீர் கடலில் கலக்கும் போது சுற்றுப்புற வெப்பநிலையிலிருந்து 4 டிகிரி செல்ஸியஸ் மட்டுமே அதிகமுடையதாக இருக்கும். இதனால் கடலியலின் மீதான தாக்கம் மிகக் குறைவாகவே இருக்கும்.

கணிக்கப்பட்ட ஆய்வின் முடிவுகள், வெளியேற்ற கடல் நீர் அதன் வெளியேற்ற இடமான 1500 மீட்டர் தொலைவிலிருந்து 50 மீட்டர் தொலைவிற்குள் சுற்றுபுற வெப்பநிலையைவிட 0.5 டிகிரி செல்ஸியஸ் அதிகமாகவும், மேலும் 150 மீ தொலைவிற்குள் சுற்றுப்புற வெப்பநிலைக்குச் சமமாகவும் வரும் என்று தெரிவிக்கிறது. மேலும் கடல் நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கடல்நீரின் உப்பு அளவு 150 மீட்டர் தொலைவிற்குள் 0.5 பிபிடி என்ற அளவில் குறைக்கப்படும்.

## 4.6 பசுமை பரப்பு மேம்பாடு

உத்தேசித்துள்ள மின்நிலையத்தின் மொத்த நிலத்தில் **124 ஏக்கர்** நிலம் பிரதான மின்நிலைய வளாகத்தினை சுற்றிலும் மற்றும் **35 ஏக்கர்** நிலம் சாம்பல் குட்டையைச் சுற்றிலும் பசுமை பரப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலத்தில் மரம் செடிகளை வளர்த்து பசும்பரப்பை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மாசுத்துகள்கள் மற்றும் ஒலி மாசு ஆகியவை கட்டுப்படுத்தப்படும்.

## 4.7 மின் நிலையத்திற்கு தேவையான நிலம்

உத்தேசித்துள்ள மின்நிலையம் சுமார் 594.18 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது.

நிலத்தின் விவரம் கீழ்வருமாறு

| **நிலம் பற்றிய விவரம்** | **அளவு (ஏக்கரில்)** |
|---|---|
| அரசாங்க நிலம் | 66.90 |
| தனியார் பட்டா நிலம் | 527.78 |
| **மொத்தம்** | **594.18** |

சுமார் 430 ஏக்கர் தனியார் பட்டா நிலங்களை இந்நிறுவனம் வாங்கியுள்ளது. அனல் மின் நிலையம் அமையவுள்ள அரசுக்கு சொந்தமான 66.9 ஏக்கர் நிலங்களை மாற்று நிலங்கள் கொடுத்து வாங்குவதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டு, அந்த விண்ணப்பம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

மெய்யன் மற்றும் மன்னன் தெருக்களைச் சேர்ந்த சுமார் 93 வீடுகள் மின்நிலையம் அமையவுள்ள இடத்தில் அமைந்துள்ளது. சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 352 சதுர அடி கொண்ட 93 புதிய வீடுகளை அதற்குண்டான அடிப்படை வசதிகளான கழிப்பிடம், பொது மேல் நிலை நீர் தேக்கத்தொட்டி, சாலை வசதி மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றோடு அமைத்து கொடுப்பதுடன், இடம்பெயரும் மக்கள் வழிபாடுசெய்வதற்கு ஏதுவாக கோவிலும் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகள் அனைத்தும், அனைத்துத்தரப்பினரால் ஏற்றுக்கொள்ளும் இடத்தில் அமைக்கப்படும். இடப்பெயர்ச்சி மற்றும் மறுவாழ்விற்காக சுமார் 6.05 கோடி ரூபாய் சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஒதுக்கியுள்ளது.

## 4.8 சமுதாய மேம்பாடு

சிந்தியா பவர் ஜெனரேட்டிங் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சமூக நல மேம்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைபடுத்த ரூபாய் 15.20 கோடியை ஒதுக்கியுள்ளது. இத்தொகை கட்டுமான காலத்தில் அதாவது 4 ஆண்டுகளில் சமூக நல மேம்பாட்டிற்காக செலவிடப்படும். மேலும் மின் உற்பத்தி துவங்கும் காலத்தில் சமுதாய மேம்பாட்டிற்காக ஆண்டொன்றிற்கு ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.

## 5.0 சுற்றுச்சூழல் மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்காக 635 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

## 6.0 சுற்றுசூழல் கண்காணிப்பு

இந்நிறுவனம் சுற்றுசூழல் கண்காணிப்பு திட்டத்திற்காக முழு செயல்திறனுடைய அனைத்து வசதிகளுடன் கூடிய மாசுக் கட்டுப்பாட்டு கண்காணிப்பு ஆய்வகம், மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி நிறுவப்படும்.

## 7.0 முடிவுரை:

உத்தேசித்துள்ள மின் நிலையம் தமிழகத்தில் வளர்ந்து வரும் மின்தேவையை பூர்த்தி செய்ய உதவிகரமாக இருக்கும். மேலும் இது இப்பகுதியில் மின்சாரம் வழங்கலை வலுப்படுத்தவும் தொழிற்துறை மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும், இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரமும் முன்னேற்றமடையும்.

தகுந்த தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டங்களை அமல்படுத்துவதன் மூலமாக சுற்றுச் சூழல் மீது எவ்வித தாக்கமும் ஏற்படாத வகையில் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் அமையும்.

காற்றின் மாசு தூசுக்களின் உமிழ்வு, ஒலி ஏற்படுதல், கழிவுநீர் தரம் ஆகியவை மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினால் வரையறுக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்ட அளவுகளுக்குள் இருக்குமாறு நெறிமுறைபடுத்தப்படும்.

சுற்றுச்சூழலுக்கு இணக்கமான செயல்பாட்டினை கொண்டிருப்பதோடல்லாமல், இந்நிறுவனம் பல்வேறு தரப்பட்ட சமூக பொருளாதார சேவைகளை ஆற்றவிருப்பதனால், இப்பகுதியில் சுற்றுச்சூழல் மேம்படுவதோடல்லாமல் மிகச்சிறந்த பொருளாதார வளர்ச்சியும் இருக்கும்.